செ.வெ.எண்: 16 நாள்:09.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட நிர்வாகம் சார்பில் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று (09.02.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் பேசியதாவது :-**

ஊரக வளர்ச்சித்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, பயிர் காப்பீட்டுதிட்டங்கள், துறைகளில் வளர்ச்சி பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பொது சுகாதாரம், வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, வளர்ச்சித்துறை, கல்வித்துறை மற்றும் அனைத்துத்துறை அலுவலர்களுடன் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்ட பணிகளின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். மாவட்டத்திலுள்ள அரசு கட்டிடங்களில் அங்கன்வாடி மையங்கள், நியாயவிலைக்கடைகள் மற்றும் வேளாண்மைத்துறை சார்ந்த அலுவலகங்கள், பள்ளி கட்டிடங்கள் ஏதேனும், பழுதுகள் அடைந்திருந்தால், உடனடியாக அதை சரிசெய்ய வேண்டும். அதிக அளவு தேசமடைந்த கட்டிடங்களை உடனடியாக அகற்றி விட்டு, புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான தகவல்களை உடனடியாக துறை ரீதியாக வழங்க வேண்டும். மேலும், கிராமப்புறங்களில் உள்ள தெரு விளக்கு, குடிநீர் விநியோகம் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். எதிர்வரும் நாட்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட கூடிய இடங்களில் முன்கூட்டியே கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.தனசேகரன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஜி.கே.லோகேஷ்வரி, இணை இயக்குநர் வேளாண்மை சு.அய்யாசாமி, இணை இயக்குநர் கால்நடைப்பராமரிப்புத்துறை எம்.நஸீர், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அன்புராஜன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.